**இது உங்கள் ஆண்டு அறிக்கையின் விளக்கப்படச் சுருக்கத்தைப் படிப்பதற்கான வழிகாட்டியாகும்.**

கீழ்க்காணும் விளக்கப் படச்சுருக்கத்தில் உள்ள கணக்கு விவரங்கள் விளக்கத்திற்கானவை மட்டுமே. உங்களுக்குரிய கணக்கு விவரங்கள், நீங்கள் சென்ற ஆண்டு செய்த பரிவர்த்தனைகளின் அடிப்படையில் மாறுபட்டிருக்கும்.




1A

உங்களது ஆண்டு அறிக்கையைப் பதிவிறக்கம் செய்ய கிளிக் செய்யுங்கள்.




1B

**<u>உங்களது ஆண்டு அறிக்கையின் சுருக்கம்</u>**

உங்களது ஆண்டு அறிக்கையுடன் தொடர்புடைய பிரிவுகளைக் காண, தலைப்புகள்மீது கிளிக் செய்யுங்கள்.




2

**<u>மத்திய சேம நிதி சேமிப்புகள்</u>**

உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகள் அனைத்திலும் 31 டிசம்பர் 2023 தேதியில் உள்ள மொத்த இருப்புத் தொகை.

3

**<u>நிதிநிலை உதவிக்குறிப்பு</u>**




உங்கள் சாதாரணக் கணக்கில் உள்ள சேமிப்பை சிறப்பு அல்லது ஓய்வுக்காலக் கணக்குக்கு மாற்றுவது, அல்லது மத்திய சேம நிதிக் கணக்கில் ரொக்கப்பணம் போட்டு வரிவிலக்குப் பெறுவது போன்ற வழிகளின் மூலம் உங்களின் மற்றும்/அல்லது உங்களது அன்புக்குரியவர்களின் ஓய்வுக்காலச் சேமிப்பை எவ்வாறு பெருக்கலாம் என்று தெரிந்து கொள்ளுங்கள்.




4

**<u>உங்களது மத்திய சேம நிதி சேமிப்புகளைப் பெருக்குதல்</u>**

உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகளில் 2023-ல் செலுத்தப்பட்ட பல்வேறு சந்தாக்களின் விவரச்சுருக்கம்.

நீங்களும், உங்கள் முதலாளியும், அரசாங்கமும் 2023-ல் உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகளில் செலுத்திய சந்தாவின் விவரங்கள்.

கீழ்க்காண்போரிடமிருந்து நீங்கள் பெற்ற சந்தாவின் விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்:

- நீங்கள்
- முதலாளி
- அரசாங்கம்

அரசாங்கத்திடமிருந்து உங்களுக்குக் கிடைத்த பங்களிப்புகளின் விவரங்களைக் காட்டும் எடுத்துக்காட்டு




2023-ல் மற்ற பரிவர்த்தனைகளிலிருந்து உங்கள் கணக்கில் நீங்கள் பெற்ற மொத்தத் தொகை.

விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.




5

**<u>வாழ்க்கையின் முக்கியத் தேவைகளுக்குப் பயன்படுத்துதல்</u>**

உங்கள் வாழ்க்கையின் முக்கியத் தேவைகளுக்காக 2023-ல் நீங்கள் பயன்படுத்திய சேமிப்புகளின் விவரச்சுருக்கத்தைப் பார்வையிட "Outflow" தலைப்பின்மீது கிளிக் செய்யுங்கள்.

2023-ல் நீங்கள் பயன்படுத்திய ஒட்டுமொத்த மத்திய சேம நிதி சேமிப்புத் தொகை

முக்கியத் தேவைகளின் வகைகள்:

- குடியிருப்பு
- ஓய்வுக்காலம்
- சுகாதாரப் பராமரிப்பு
- மற்றவை – விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்







6

**<u>உங்கள் ஓய்வுக்காலத்திற்கான ஆதரவு / உங்கள் பொற்காலத்திற்கான ஆதரவு (55 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுள்ள உறுப்பினர்களுக்கு)</u>**

உங்களின் ஓய்வூதிய வழங்குதொகைகள் பற்றிய விவரங்கள் ஒரே பார்வையில்.




7

**<u>மத்திய சேம நிதிக் கழகம் நிர்வகிக்கும் அரசாங்கத் திட்டங்களால் நீங்கள் பெற்ற நன்மைகள்</u>**

நீங்கள் 2023-ல் அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரொக்கத் தொகையின் விவரச்சுருக்கம்.

விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.




8

**<u>உங்களது மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகள்</u>**

நீங்கள் 2023-ல் செய்த முதல் மூன்று மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகளின் முன்னோட்டம்.

நீங்கள் 2023-ல் செய்த மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகள் அனைத்தையும் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.




9

**<u>உங்களுக்கான தகவல்கள்</u>**

31 டிசம்பர் 2023 நிலவரப்படி, உங்களுக்குப் பொருந்தும் மத்திய சேம நிதித் திட்டங்கள் தொடர்பான தகவல்கள்.